மின்னிதழ்

# தேசியம்

THESIYAM தේසියම්

www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 0 [illegible] வள்ளுவர் ஆண்டு 2054 | வெள்ளிக்கிழமை 12.01.2024 | பக்கங்கள் 09



பக்கம்–06

# விடுதலை புலிகளின் தடைகளை நீக்குங்கள்!

## கஜேந்திரன் எம்.பி தெரிவிப்பு!

## சுமந்திரனை எதிர்த்து தேர்தலில் களமிறங்க தயார்!

## சிறீதரன் திட்டவட்டம்!



பக்கம்–06

## பிரித்தானிய இளவரசியின் யாழ். விஜயம்: ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு!





பக்கம்–05

## இலங்கை கிரிக்கெட் அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட தமிழ் இளைஞன்



பக்கம்–07


## ஜனநாயக குரல்களை பொலிஸார் கரம்கொண்டு ஒடுக்க வேண்டாம்: குரலற்றவர்களின் குரல் அமைப்பு!




பக்கம்–04

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## கிழக்கு ஆளுநர் – பயனற்றுப் போகும் விமர்சனங்கள்.

தைப் பொங்கல் விழாவை கிழக்கு மாகாண ஆளுநர் பொங்கல் தினத்துக்கு முன்னரே நடத்திமுடித்துவிட்டார் என்பது தொடர்பான விமர்சனங்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

இம்மாதம் 06ஆம் திகதி ஜல்லிக்கட்டுடன் ஆரம்பமான கிழக்கு மாகாண சபையின் தைப் பொங்கல் விழா 08ஆம் திகதி நிறைவுக்கு வந்தது.

தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் வீரத்தையும் பறைசாற்றும் ஜல்லிக்கட்டு இலங்கை வரலாற்றில் முதல் முறையாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானின் முயற்சியில் இலங்கையின் திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரில் நடைபெற்றிருந்தன. தமிழருடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ் நாட்டை தாண்டி வேறு ஒரு நாட்டில் நடைபெற்றது இதுவே முதல்முறையென்ற பெருமையை இவ் ஜல்லிக்கட்டு பெற்றுக் கொண்டது.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்கத்தின் வழிகாட்டலில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் பிரதம அதிதியாக மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் ஸ்ரீமுருகன் மற்றும் நடிகர் நந்தா, சிறப்பு விருந்தினர்களாக ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்க தலைவர் ஒண்டிராஜ், செயலாளர் ராஜா இன்னும் பல நாடுகளை சேர்ந்த விசேட அழைப்பாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்திருந்தாலும் இப்போட்டிகளை நடத்தி வைத்திருக்கின்றமையான தமிழர் வரலாற்றில் மிக முக்கியமானதே. அதே போன்று 07ஆம் திகதி படகோட்ட போட்டி, ஆண், பெண் இருப்பாளருக்குமான சிலம்பம் மற்றும் பீச் கபடி என்பனவும் திருகோணமலையில் நடத்தப்பட்டன.

முக்கியமாக இலங்கை வரலாற்றில் முதல் முறையாக 1008 பொங்கல் பானை, 1500 பரத நாட்டிய கலைஞர்கள், 500 கோலங்களுடன் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றிருந்தது. மிகவும் திட்டமிடப்பட்ட வகையில், நடைபெற்ற இந்த வருடத்துக்கான தைப்பொங்கல் விழா பாராட்டப்பட வேண்டியதே.

இலங்கை வரலாற்றில் இவ்வாறானதொரு தைப் பொங்கல் விழாவை தமிழர் தாயகப்பிரதேசத்தில் நடத்தியமைக்காக உலகம் முழுவதும் இருந்து செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தும் உள்ளனர்.

தமிழர் திருநாளாம், பொங்கலை வரவேற்கும் "பொங்கல் திருவிழா" வாக பிரமாண்டமாக கொண்டாடியமையானது பெருமைப்படவும் வேண்டியதே.

இருந்தாலும் விமர்சனங்களை முன்வைத்து வருபவர்கள் குறித்து நாம் கவனம் கொள்ளக்கூடாது என்பதல்ல. மட்டக்களப்பின் மயிலத்தமடுவில் கால்நடைகள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் இவ்வாறானதொரு ஜல்லிக்கட்டு தேவையா?. தைப்பொங்கலானது தை பிறந்ததன் பின்னரே நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆளுநருடைய அதிகாரத்துக்குப் பயந்து ஏன் கிழக்கு மாகாணத்தின் அதிகாரிகள் இதற்கேன் அனுமதித்தார்கள் என்று கூட கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

வட- கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு பின்னர் கிழக்கு வேறு வடக்கு வேறாகப் பிரிக்கப்பட்டு தனி மாகாண சபையாக கிழக்கு இயங்கி வருகின்றது. இருந்தாலும், இதுவரையில் இவ்வாறானதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் மாகாண சபைக்கான ஆளுநர்களாக நியமனம் பெற்றிருந்தனர்.

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தவிர சிறுபான்மை யினத்தவர்கள் ஆளுநராக நிமயமிக்கப்படவில்லை. தற்போதைய ஆளுநரான செந்தில் தொண்டமான் ஆளுநரானது முதல் சிறுபான்மையினர் தொடர்பான முக்கிய பல தீர்மானங்கள் அவர் எடுத்திருக்கிறார். அதே போன்றதொரு நல்முயற்சியாக இதனைக் கருதுவதில் என்ன சிக்கல் நம் தமிழர்களுக்கு இருக்கிறது என்பதே இந்த இடத்தில் கேள்வி.

ஏதம் செய்துவிடாது, தமிழர்களின் விடயங்களில் தவறான தீர்மானங்களை எடுத்து சிறுபான்மையின ருக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவராக கிழக்கின் ஆளுநர் இயங்குவாராக இருந்தால் விமர்சங்களும் தடைகளும் தேவையானதே. அதே நேரத்தில் முடிந்ததைக்கூட செய்யாது வாழாதி ருப்பவர்கள் இந்த விமர்கனங்களுக்குரியவர்களே. இதனை தமிழர்கள் நினைவில் கொள்வதே இந்த வருடத்துக்கான பொங்கல் திருவிழாவிற்கு நாம் கொடுக்கும் பதிலாக இருக்கவேண்டும்.

இவ்வருடத்தின் விமர்சனங்கள் எதிர்வரும் காலங்களில் பயனைத் தரட்டும்.

## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைகு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339

# போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு.




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கடந்த வாரம் நடாத்தப் பெற்ற போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் இடம்பெற்றிருந்தது.

குறித்த கௌரவிப்பு நிகழ்வானது புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் ச.கிருஷாந்தன் தலைமையில் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரை, வாசிப்பு, நுண்ணறிவு, பேச்சு போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கலந்து கொண்ட அதிதிகளினால் பாராட்டி சான்றிதழ்களும், பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தரம் 1, 2,3 மாணவர்களுக்கிடையே வாசிப்பு போட்டியும், தரம் 4,5 மாணவர்களுக்கிடையே நுண்ணறிவு, பொதுவிவேகமும், தரம் 6,7 மாணவர்களுக்கிடையே பேச்சு போட்டியும், தரம் 8,9,10,11 மாணவர்களுக்கிடையே கட்டுரை போட்டியும் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்ததோடு அறிவொளி புத்தகசாலையினால் புதுக்குடியிருப்பு பிரதேசசபை நூலகத்திற்கென ஒரு தொகை புத்தகங்கள் பிரதேச சபை செயலாளரிடம் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.ஜசிந்தன், புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி சி.பாஸ்கரன், ஒட்டுசுட்டான் இந்துதமிழ்கலவன் வித்தியாலய அதிபர் திருமதி வெ.நித்தியகலா, ஒலுமடு தமிழ் வித்தியாலய அதிபர் ஜெ.ஜெகதீபன், ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி சி.சுப்ரமணியேஸ்வரன், ஓய்வுநிலை அதிபர் இ.செல்வநாயகம், துணுக்காய் பிரதேச சபை செயலாளர் அ.பாலகிருபன், மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளர் செ.செல்வகுமார் , மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




சண்முகம் தவசீலன்







# ஜனநாயக குரல்களை பொலிஸார் கரம்கொண்டு ஒடுக்க வேண்டாம்:

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு




ஜனநாயக குரல்களை பொலிஸார் கரம்கொண்டு ஒடுக்க வேண்டாம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் மு.கோமகன் தெரிவித் துள்ளார்.

வவுனியாவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருகை தந்த போது ஆர்ப்பாட்டம் செய்ததாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் ஒன்றின் தலைவி சி.ஜெனிற்றா தொடர்பில் நேற்று (11.01. 2024) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குரலற்றர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

**ஒருங்கிணைப்புக்குழு**

கடந்தவாரம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க வடக்கு மாகாணத்திற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டி ருந்தார். அதன் ஒருகட்டமாக, 05.01.2023 அன்று வவுனியாவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார்.

அதன்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து, “ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் செய்யப் பட்ட தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது?” என்பதற்கான பதிலை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுப்பதற்காக அங்கு சென்றிருந்தனர்.

எனினும், அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவர்கள், பொலிஸாரினால் வழிமறிக்கப்பட்டார்கள். அதன்போது, ஜனநாயக நாட்டில் தமக்கு மறுக்கப் பட்ட அடிப்படை உரிமையை ஆட்சேபித்து, காணாம லாக்கப்பட்டோரின் உறவுகள் அவ்விடத்தில் நின்றவாறு அகிம்சை வழியில் தமது எதிர்ப்பை பதிவுசெய்ய முற்பட்டிருந்தனர்.

**ஜனநாயக விரோதங்கள்**

அச்சந்தர்ப்பத்தில், கவனயீர்ப்பில் ஈடுபட்ட தாய் மாரை சினங்கொள்ளச் செய்து, அங்கு வலிந்த தொரு அமைதியின்மையை தோற்றுவித்த பொலி ஸார், கைகளில் ஒப்படைத்த தம் உறவுகளுக்கு நீதி கேட்டு தெருப்போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களை மனிதநேயமற்ற முறையில் பலவந்தமாக அடக்கி ஒடுக்கி பேருந்துக்குள் இழுத்துச் சென்று அடாவடியாக கைது செய்துள் ளனர்.

ஜனநாயக குரல்களை பொலிஸார் கரம்கொண்டு ஒடுக்க வேண்டாம்: குரலற்றவர்களின் குரல் அமைப்பு ; Suppress Democratic Voices With Help Of Police

இது மிக மோசமானதொரு உரிமை மறுப்பாகும். இதுபோன்ற ஜனநாயக விரோதங்கள், நாட்டி னுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு குந்தகத்தை ஏற்படுத்தவல்லன. ஜனநாயகப் பெயர் பொறிக்கப்பட்ட இலங்கை தேசத்தினுடைய ஆளுகைத்தரப்பின் ஒற்றை வாக்குறுதிக்கு மதிப்பளித்து, தமது உற்றச் சொந்தங்களை உயிர்ப்புடன் கையளித்த உறவுகள், தம் அன்பிற்குரியவர்களை மீளத்தருமாறு, அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது எனக்கேட்டு 14 ஆண்டுகாலமாக தொடர் போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள்.

அந்தப் போராட்டங்களில் பங்கெடுத்த வயோதிபப் பெற்றோர்களில் பலர் உடல் உள ரீதியில் பாதிக் கப்பட்டு உயிர்நீத்துள்ளார்களே தவிர, இவர்களுக்கு இதுவரை நீதிகிட்டவில்லை. இதுபோன்று, போரின் பெயரில் படுகாயப்படுத்தப்பட்ட பல்வேறு மனக்காயங் களுக்கு மருந்திட வேண்டிய ஆட்சியாளர்கள், அதனைச் செய்ய முயற்சிக்காது மென்மேலும் காயங்களை ஏற்படுத்திக்கொண்டு உதட்டளவில் நல்லிணக்கம் பற்றிப் பேசுவது முரண்நகையானது.

அடிப்படை உரிமை

பாதிக்கப்பட்ட குடிமக்களது நீதி நியாயத்திற்கான குரல்களை, பொலிஸார் கரம்கொண்டு அடக்கி தீர்வினைக் காண்பதனூடாக நாட்டை மீண்டும் அழிவுக்கே இட்டுச்செல்வதாக அமையும். எனவே, நீதிகோரி குரலுயர்த்திய, வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி சி.ஜெ னிற்றா காவல் துறையால் கைது செய்யப்பட்டு விளக் கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரை உடனடியாக விடுவிக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென “குரலற்றவர்களின் குரல்“ அமைப்பினராகிய நாம் மனிதநேய சிவில் அமைப் பென்ற வகையில் வலியுறுத்த கடமைப்படுகிறோம்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப் பளித்து கருத்துச் சுதந்திரத்திற்கு செவிசாய்த்து ஜனநா யக பண்புடைய உணர்வு வெளிப்பாடுகளுக்கான தடைகளை அகற்றி, நடந்து முடிந்த யுத்தத்திற்கான காரண காரியங்களை கண்டடைந்து அவற்றுக்கு தாமதமற்ற தீர்வினை காண்பதன் மூலமே நாட்டில், உண்மையான நல்லிணக்கத்தை உறுதிசெய்ய முடியும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறோம் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 +94 77 149 9094
தேசியம் www.thesiyamnews.com THESIYAM තේසියම්

# பிரித்தானிய இளவரசியின் யாழ். விஜயம்: ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு!




மூன்று நாள் விஜயம் இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று(11) இளவரசி விஜயம் செய்யும் இடங்களில் பிரதான ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை என்பதுடன் வலையொளி அலைவரிசை (YouTube Channel) உள்ளிட்ட நால்வருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு இளவரசி வருகைதரவுள்ள நிலையில் செய்தி சேகரிக்க சென்ற பிரதான ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் அனுமதி மறுக்கப்பட்டமை ஊடகவியலாளர்கள் இடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

**முதல் அரச பயணம்**

இலங்கையின் பிரபல ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவை சேர்ந்தவர்களுக்கும் அனுமதியளிக்கபடவில்லை என கூறப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் பிரித்தானிய தூதரகத்தை ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு கேட்டபோது யாழ்ப்பாணத்தில் இயங்கும் அறக்கொடை நிலையம் ஒன்றின் ஊடகப் பொறுப்பாளரே நான்கு பெயரை சிபாரிசு செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் பிரித்தானிய ஆன் இளவரசியின் வட மாகாணத்துக்கான முதல் அரச பயணமாக இந்த பயணம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கிளிநொச்சி**

மேலும், கிளிநொச்சிக்கு இன்று விஜயம் மேற்கொண்ட பிரித்தானிய இளவரசி கிளிநொச்சி முகமாலைப் பகுதியிலுள்ள மனிதாபிமான கண்ணி வெடியகற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

அத்தோடு, கண்ணிவெடி அகற்றும் இடங்களையும் அதேபோல கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியேறிய இந்திராபுரம் பகுதிக்கும் சென்று பார்வையற்றுள்ளனர்.





# சபரிமலைக்கு சென்ற யாழ். பக்தர்!

## நடுவானில் நடந்த துயரம்



கொழும்பிலிருந்து சென்னைக்கு சென்ற விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென உடல் நலக்குறைவு காரணமான யாழ்ப்பாணத்தை சேர்ந்த பக்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது ஐயப்ப பக்த நண்பர்களுடன் சபரிமலைக்கு செல்ல கொழும்பிலிருந்து விமானம் மூலம் சென்ற போதே இத்துயர சம்பவம் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் - தெல்லிப்பளையை சேர்ந்த அய்யப்ப பக்தரான மோகனதாஸ் (வயது 49) என்பவரே இவ்வாறு

**திடீரென உடல் நலக்குறைவு**

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது குறித்த நபருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்ட நிலையில் விமானத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

எனினும் அவரது உடல்நிலை மோசமானதால் விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு அவசர கால மருத்துவ உதவிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

விமானம் சென்னையில் தரையிறங்கியதும் தயாராக இருந்த மருத்துவ குழுவினர் பரிசோதனை செய்த போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். இது குறித்து தகவல் அறிந்து வந்த விமான நிலைய காவல்துறையினர் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

நண்பர்களுடன் இருமுடி கட்டி சபரிமலைக்கு செல்ல வந்த மோகனதாஸ் இறந்ததால் அவரது உடலை மீண்டும் இலங்கைக்கு கொண்டு செல்ல இலங்கை தூதரக அதிகாரிகள் மூலம் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# சுமந்திரனை எதிர்த்து தேர்தலில் களமிறங்க தயார்!

## சிறீதரன் திட்டவட்டம்




இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ பதவிக்கு தேர்தல் இன்றி ஒருவரை ஏகனமதாக தேர்ந்தெடுக்கும் வகையில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் கலந்துரையாடுவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தேர்தல் ஒன்றின் மூலமே தலைமை தேர்ந்தெடுக்கப்படும் நிலைமை காணப்படுவதாக கட்சியின் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களை போல இந்த விடயத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விட்டுக்கொடுப்பார் என தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் கட்சிக்கான தலைமைத்துவ தேர்தலில் எம்.ஏ.சுமந்திரனை எதிர்கொள்வதில் அவர் உறுதியுடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு

அந்த வகையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படவுள்ள கட்சியின் தலைமைத்துவத்திற்கான தேர்தலில் எம்.ஏ.சுமந்திரனை, சிவஞானம் சிறீதரன் நேரடியாக எதிர்கொள்வார் என கூறப்படுகின்றது. திருகோணமலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி இந்த வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதுடன், அன்றைய தினமே வெற்றிபெற்ற வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் சபையிலுள்ள 400 உறுப்பினர்கள் அக் கட்சியின் தலைவரை தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# விடுதலை புலிகளின் தடைகளை நீக்குங்கள்!

## செல்வராசா கஜேந்திரன் தெரிவிப்பு!

ஜேவிபியின் தடைகளை எவ்வாறு நீக்கப்பட்டதோ அதேபோல் தமிழீழ விடுதலை புலிகளின் தடைகளும் நீக்கப்படவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித் துள்ளார்.

குறித்த விடயத்தை நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

அத்தோடு, ஒற்றை ஆட்சியை ஒழித்து தமிழ்த் தேசியம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஷ்டி தீர்வை கொண்டுவர வேண்டும் என்றும் அவர் வலியுறுத் தியுள்ளார்.

அதேவேளை, தமிழீழ விடுதலை புலிகள் என்ற பூச்சாண்டியை காட்டிக்கொண்டு ஒரு போதும் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மூலமாகவோ வரி திருத்தங்களினுடாகவோ இந்நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.



அத்துடன், இந்த பயங்கரவாத எதிர்பபுச் சட்டத்தை அவர் முற்றாக நிராகரிப்பதாகவும் இது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை ஒடுக்கி இந்த நாட்டை ஒரு சிங்கள பௌத்த நிரலுக்குள் கொண்டு செல்வதற்கு மாத்திரமே அது உதவுகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp
+94 76 567 3339

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் இளைஞன்



19 வயதுக்குட்பட்டோருக்கான ஐசிசி உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஷாருஜன் சண்முகநாதன் குழாமில் இடம்பிடித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தொடருக்கான இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**இலங்கை குழாம்**

இதற்கமைய சினெத் ஜெயவர்தன தலைமை யிலான குறித்த குழாமில் புலிண்டு பெரேரா, ஹிருன் கபுருபண்டார, ரவிஜான் நெத்சர, ருசன்ட கமகே, ஷாருஜன் சண்முகநாதன், டினுர கலுபஹன, மல்சா திருப்பதி, விஷ்வா லஹிரு, கருக சக்கெத், டுவின்டு ரத்நாயக்க, ருவிஷான் பெரேரா, சுபுன் வடுகே, விஹாஸ் தெவ்மிக மற்றும் விஷேன் ஹலம்பகே ஆகிய வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குழாமிற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அனுமதி வழங்கியுள்ளார்.

கொழும்பு - கொட்டாஞ்சேனை , புனித ஆசீர்வா தப்பர் கல்லூரியின் மாணவனாவான் சாருஜன் சண்முகநாதன் 19 வயதுக்குட்பட்ட இலங்கை கிரிக்கெட் குழாமில் முதல் தடவையாக கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இலங்கை குழாமில் இணைத்துக்

**சாருஜன் சண்முகநாதன்**

இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் குமார் சங்கக் காரவை முன்னுதாரணமாக கொண்டுள்ள சாருஜன், அவரைப் போலவே விக்கெட் காப்பு மற்றும் துடுப்பாட்டம் ஆகிய இரண்டையும் திறம்பட செய்து 2022 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கான விருது வழங்கும் விழாவில் சிறந்த விக்கட் காப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், 2015 ஆம் ஆண்டு பல்லேகல சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில், முன்னாள் கிரிக்கெட் வீரர் டொனி கிரேவினால் ""லிட்டில் சங்கா"" என சாருஜன் சண்முகநாதன் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# மலரன்னை-தமிழர் ஈழ இலக்கிய தாய் ! அமுதவிழா காணும் போராளித் தாய் !




போராளி எழுத்தாளரும் மாவீரருமான கப்டன் மலரவனின் தாயார் அற்புதராணி காசிலிங்கம் - மலரன்னையின் இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் பல்வேறு பத்திரிகைகள், வானொலிகள், சஞ்சிகைகளில் இலங்கை மற்றும் பிற நாடுகளில் பிரசுரமாகியுள்ளது.

**மாவீரன் கப்டன் மலரவனின் தாயார் :**

சில சிறுகதைகள் சர்வதேச வெளியீடுகளில் மீள்பதிவும் செய்யப்பட்டுள்ளது. நாற்பதிற்கும் மேற்பட்ட வானொலி நாடகங்கள் ஒலிபரப்பாகி மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளன. " கனவுகள் நனவாகும் " என்ற தொடர்நாடகம் (நாற்பத்தி மூன்று அங்கங்கள் ) ஒலிபரப்பாகி மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது. பல வானொலி நிகழ்ச்சிகளையும் எழுதியிருக்கிறார்.

இவர் எழுதிய பத்து ஆங்கிலக் கவிதைகள் உழவ ளிசவைப என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது. இவரது நாற்பதிற்கும் மேற்பட்ட ஆக்கங்கள் பல்வேறுபோட்டிகளில் பரிசு பெற்றிருக்கின்றன.

தற்போது அமுதவிழா காணும் அவரின் 'மலரன்னையின் வாழ்வும் படைப்பும்' நூல் வெளியீட்டு நிகழ்வு 08.01.2024 திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள ராஜா கிறீம்கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் ஜீவநதி ஏற்பாட்டில் இடம்பெற்றது.

**அமுதவிழா காணும் மலரன்னை :**

எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமான கோகிலா மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வரவேற்புரையினை இரா. குலசிங்கம் அவர்களும் வெளியீட்டுரையினை விரிவுரையாளர் புலோலியூர் வேல்நந்தகுமார் அவர்களும் நிகழ்த்தினர்.

மலரன்னையின் சிறுகதைகள் பற்றி எழுத்தாளர் பிரேமினியும், மலரன்னையின் நாவல்கள் என்கிற தலைப்பில் விரிவுரையாளர் அஜந்தகுமாரும் சிற்றுரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. மலரன்னையின் வாழ்வும் படைப்பும் நூலினை ஜீவநதி ஆசிரியர் பரணீதரன் வெளியிட்டு வைக்க மலரன்னை அவர்கள் நூலினை பெற்றுக் கொண்டார்கள்.

**பல விருது பெற்ற மலரன்னை :**

1950 களில் இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்பின் சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மலரன்னை மூத்த புகழ் பெற்ற எழுத்தாளர் கச்சாயில் இரத்தினத்தின் மகள் ஆவார்.1993 ஆம் ஆண்டில் இவரது முதலாவது சிறுகதை வெளியாகியது.அன்றிலிருந்து தொடர்ச்சியாக எழுதி வருபவர்.

சர்வதேச அளவில் நடை பெற்ற இலக்கிய போட்டிகளில் நான்கு முறை சிறுகதை, நாடக எழுத்துருவுக்காக பரிசு பெற்றுள்ளார். சிரித்திரன், மல்லிகை சிறுகதைப் போட்டிகளிலும் அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றுள்ளார். "பாலைவனத்துப் புஸ்பங்கள்" என்ற நாவல் தேசிய கலாச்சாரப் பேரவையின் தேர்வில் இரண்டாம் பரிசுபெற்றது.

அத்துடன் இலக்கிய விவரணம் எழுதுவதிற்கான பிரிவு போட்டியிலும் முதற்பரிசு பெற்றிருக்கிறார். ஓவியம், ஒளிப்படம் முதலியவற்றிலும் ஈடுபாடு உடைய இவர் தையல்கலையில் சிறந்து விளங்கினார். இவரது சில மொழி பெயர்ப்பு கட்டுரைகளும் , சில கவிதைகளும் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளது. இலக்கியப்பங்களிப்புக்காக கலைமாமணி, கலைஞானச்சுடர் விருதுகளை பெற்றுள்ளார்.

**தமிழர் ஈழ இலக்கிய தாய் விருது:**

அமுத விழா நாயகிக்கான விழாவில் கௌரவிப் பினை ஜீவநதி பதிப்பகத்தின் உரிமையாளரும் ஜீவநதி இதழின் ஆசிரியருமான கலாமணி பரணீதரன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தொடர்ந்து இந்துநாகரீகத்துறை தலைவரான சுகந்தினி முரளீதரன் அவர்கள் மாலையணிவிப்பு செய்து கௌரவித்தார்.

ஜீவநதி பதிப்பகத்தின் ஏற்பாட்டிலான தமிழர் ஈழ இலக்கிய தாய் என்கிற கௌரவ விருதினை அம்மாவுக்கு மூத்த எழுத்தாளர் அ. ஜேசுராசா வழங்கி வைத்தார். நூல் பற்றிய கருத்துரையினை எழுத்தாளர் மயூரரூபனும் நிகழ்த்தினர். அதனை தொடர்ந்து ஊரவர்கள், வாசகர்கள், நலன்விரும் பிகள் என பலரும் பொன்னாடை போர்த்தி அவரை வாழ்த்தி கௌரவம் வழங்கினர். இறுதியாக ஏற்புரையினையும் நன்றியுரையினையும் மலரன்




தொடர்ச்சி 09 பக்கம்

# மலரன்னை-தமிழர் ஈழ இலக்கிய தாய் ! அமுதவிழா காணும் போராளித் தாய் !




னை அவர்கள் நிகழ்த்தினார்.

**ஈழத்தின் போற்றுதற்குரிய படைப்புகள்:**

மலரன்னையின் நூல்களில்
வேர்பதிக்கும் விழுதுகள் ( 16 சிறுகதைகளின் தொகுப்பு) -2015,
கீறல் ( 23 சிறுகதைகளின் தொகுப்பு) -2016,
மறையாத சூரியன் (நாவல்) -2016 - முத்துமீரான் விருது (2017),
மௌனத்தின் சிறகுகள் (நாவல்) -2017,
அனலிடைப்புழு ( 25 சிறுகதைகளின் தொகுப்பு) - 2017, மலைச்சாரலின் தூவல் (நாவல்)- 2018, காகிதப்படகு (மூன்று குறுநாவல்களின் தொகுப்பு) - 2018, அப்பாவின் தேட்டம் (25 சிறுகதைகளின் தொகுப்பு) -2019 ஆகிய படைப்புக்கள் ஈழத்து இலக்கியப் பெருவெளியில் முக்கியமானவை யாகும்.


மலரன்னை ஒரு ஹோமியோபதி மருத்துவர் என்பதும் ஹோமியோபதி, சுதேச மருத்துவத்திற் காக பிரித்தானியாவில் இயங்கும் மாற்று மருத்து வத்திற் காக அமைப்பு ஒன்றிலும் அங்கத்தவராக இருந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது பாலைவனத்துப் புஸ்பங்கள் ( நாவல்)- 2019, உயிர் சுமந்த கூடு ( 18 சிறுகதைகளின் தொகுப்பு) -2020, அசை (21 சிறுகதைகளின் தொ குப்பு) - 2021, ஒரு பிடி சாம்பல் (16 சிறுகதைகளின் தொகுப்பு) - 2021 போன்ற படைப்புக்கள் ஈழத்து இலக்கியத்தின் போற்றுதற்குரிய படைப்புக்களாகும்.

**தமிழன்னை பெற்ற மலரவன்:**

தமிழன்னை பெற்ற மலரவன் என்னும் ஒரு போராளியை மலரன்னை 23ஃ11ஃ1992 களத்தில் இழந்தாலும்,
அந்தப் போராளியை, படைப்பாளியை சுமந்த தாயின் கரங்கள் போராட்டம் தொடர்பான பல பதிவுகளை தொடர்ந்து எழுதியது.

தனது பிள்ளைக்கும் வீரமகனுக்கு தாயின் கவிதை அஞ்சலி! என்ற தலைப்பில் கவிதைகளைக்





கண்ணீரோடு வரைந்தார் வீரத்தாய் மலரன்னை. அக்கவிதையின் இறுதி வரிகளில்

மண்ணில் உதிர்த்திட்ட மைந்தனே! இன்று விண்ணில் உயர்ந்திட்டாய் மா வீர னாய் விதையாய் வீழ்ந்திட்டாய் மண்ணிலே இன்று கதையாகி விட்டதே உன் சரிதை.

இருபதே வருடங்கள் வாழ்ந்தாலும் அர்த்தமாய் வாழ்ந்திட்டாய் வல்லமையால் இந்த மண்ணின் விடியலே உன் கனவு நீ விண்ணிலிருந்து நோக்குவாய் மலரும் தமிழீழமதை!

தாய் மண்ணிற்காக போராடி, களப்பலியாகிய போராளி எழுத்தாளரும் மாவீரருமான கப்டன் மலரவனின் தாயார் மலரன்னையின் படைப்புக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கு மேலும் பெருமை சேர்க்கின்றன.




**ஐங்கரன் விக்கினேஸ்வரா**